6345

AL/2023(2024)/25B/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

යුරෝපා ඉතිහාසය II (I කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி I)
History of Europe II (Part I)

25 B | T | II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

ஐரோப்பிய வரலாறு - கிரேக்க - உரோம காலம் முதல் கி.பி. **1989** வரை

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

- இவ்வினாத்தாள் பகுதி **I**, பகுதி **II** ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- பகுதி **I** இல் **1 - 40** வரையான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக.
- பகுதி **I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி **I** இற்கான விடைத்தாள்களை பகுதி **II** இற்கான விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

## பகுதி I

- **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**1.** (1) சமோஸ் (2) டீலோஸ் (3) லெஸ்போஸ்
(4) பார்தினோன் (5) மைசினி (……)

**2.** (1) தேலீஸ் (2) அனெக்சிமினீஸ் (3) இடிபஸ்
(4) பைதகரஸ் (5) டிமோகிறடஸ் (……)

**3.** (1) பெரிக்லீஸ் (2) ஒகஸ்தஸ் (3) கலிகியூலா
(4) நீரோ (5) ஹாட்ரியன் (……)

**4.** (1) சலர்னோ (2) கொலோசியம் (3) பொலோக்னா
(4) பரிஸ் (5) பாதுவா (……)

**5.** (1) பெல்கிறேட் (2) புச்சாரெஸ்ட் (3) புடாபெஸ்ற்
(4) வோர்சோ (5) கோகேசஸ் (……)

**6.** (1) பெரஸ்டர் ஜோன் (2) மதியாஸ் (3) நான்காம் கிறிஸ்தியன்
(4) வொலன்ஸ்ரைன் (5) குஸ்டவுஸ் அடோல்பஸ் (……)

**7.** (1) முதலாம் சார்ள்ஸ் (2) பதினாறாம் லூயி (3) சார்ள்ஸ் அல்பேர்ட்
(4) இரண்டாம் சார் அலெக்சாந்தர் (5) இரண்டாம் சார் நிகொலஸ் (……)

**8.** (1) இங்கிலாந்து (2) வேல்ஸ் (3) ஸ்கொட்லாந்து
(4) கிறீன்லாந்து (5) வட அயர்லாந்து (……)

[பக். 2 ஐப் பார்க்க

**9.** (1) றொபேட் வால்போல் (2) றொபேட் ஸ்ருவர்ட் காசல்றீ (3) ஹென்றி பாமஸ்டன்
(4) பெஞ்சமின் டிஸ்ரேலி (5) வில்லியம் கிளாட்ஸ்டன் (……)

**10.** (1) சர்வதேச நீதிமன்றம் (ICJ)
(2) உலக சுகாதார தாபனம் (WHO)
(3) உலக வர்த்தகத் தாபனம் (WTO)
(4) உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (WFP)
(5) ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC) (……)

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள் வீதம்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**11.** (1) சியூஸ் - வானத்தின் அதிபதி
(2) அதீனா - ஞானத்தினதும் நுட்பக் கலைகளினதும் அதிபதி
(3) நெப்டியூன் - மதுவின் அதிபதி
(4) அப்பர்டயிட் - காதலுக்கு அதிபதி
(5) புரசயிடன் - சமுத்திரத்தின் அதிபதி (……)

**12.** (1) ஹிபொகிறடிஸ் - அனைத்து நோய்களுக்கும் இயற்கைக் காரணம் ஒன்று உண்டு
(2) சோக்கிரடிஸ் - "நற்குணங்களே ஞானமாகும்"
(3) அரிஸ்டோடில் - "அரசு என்பது இயற்கையின் படைப்பாகும்"
(4) நிக்கோலோ மக்கியவல்லி - இளவரசனின் (ஆட்சியாளனின்) அதி மேலான கடமை தனது இராச்சியத்தின் ஆதிக்கத்தையும் பாதுகாப்பையும் பேணுவதாகும்.
(5) நெப்போலியன் போனபாட் - "நான் வந்தேன், நான் பார்த்தேன், நான் கைப்பற்றினேன்." (……)

**13.** (1) ஆங்கிலோ - சக்ஸன்மார் - பிரித்தானியா
(2) பிராங்ஸ் - பிரான்ஸ்
(3) விசிகோத்ஸ் - ஸ்பானியா
(4) லொம்பார்ட்ஸ் - டென்மார்க்
(5) ஒஸ்ரோகொத்ஸ் - இத்தாலி (……)

**14.** (1) மகா பிரடெரிக் - பிரஷ்யா
(2) மகா பீற்றர் - இங்கிலாந்து
(3) மகா கதரீன் - ரஷ்யா
(4) பதினைந்தாம் லூயி - பிரான்ஸ்
(5) இரண்டாம் ஜோசப் - ஆஸ்திரியா (……)

**15.** (1) அரசர்களின் தெய்வீக உரிமை - வோல்ரயர்
(2) மக்கள் விருப்பிலான அரசாங்கம் - ஜோன் லொக்
(3) பொது விருப்பு பற்றிய எண்ணக்கரு - ஜீன் ஜக் ரூசோ
(4) பழமை பேணுதல் கோட்பாடு - எட்மன் பேர்க்
(5) கூட்டுறவு இயக்கம் - றொச்டேல் முன்னோடிகள் (……)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) ஹெரடோடஸ் | A உரோம வரலாறு |
| (ii) துஸிடிடீஸ் | B அரசியல் |
| (iii) பிளேட்டோ | C பெலபோனிசியன் போர் வரலாறு |
| (iv) அரிஸ்டோடில் | D பாரசீகப் போர்களின் வரலாறு |
| (v) டைட்டஸ் லிவி | E குடியரசு |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (……)

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



| | X | | Y |
|---|---|---|---|
| **17.** | (i) தொலமி | A | சூரிய மைய பிரபஞ்சம் பற்றிய கோட்பாடு |
| | (ii) நிக்கலஸ் கொப்பர்னிகஸ் | B | புவி ஈர்ப்பு பற்றிய விதி |
| | (iii) ஜொஹென்ஸ் கெப்லர் | C | குருதிச் சுற்றோட்டம் கண்டுபிடிப்பு |
| | (iv) வில்லியம் ஹார்வே | D | புவியும் ஏனைய கோள்களும் சூரியனைச் சுற்றி நீள்வட்டப்பாதையில் பயணிக்கின்றன என்ற விதி |
| | (v) ஐசக் நியூட்டன் | E | புவிமைய பிரபஞ்சக் கோட்பாடு |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **18.** | (i) பூர்போன் | A | போர்த்துக்கல் |
| | (ii) ஸ்டுவர்ட் | B | நெதர்லாந்து |
| | (iii) ரோமனொவ் | C | இங்கிலாந்து |
| | (iv) பிரகன்சா | D | பிரான்ஸ் |
| | (v) ஒரேஞ்ச் | E | ரஷ்யா |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **19.** | (i) முப்பதாண்டு போர் | A | சன் ஸ்ரெபனோ உடன்படிக்கை |
| | (ii) ஏழாண்டு யுத்தம் | B | பிரெஸ்ட் - லிட்டொவ்ஸ்க் உடன்படிக்கை |
| | (iii) ரஷ்யா - துருக்கி யுத்தம் (1877 - 78) | C | போட்ஸ்மத் உடன்படிக்கை |
| | (iv) ரஷ்யா - ஜப்பான் யுத்தம் | D | பரிஸ் உடன்படிக்கை |
| | (v) ரஷ்யா - ஜெர்மன் யுத்தம் | E | வெஸ்ற்பேலியா உடன்படிக்கை |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **20.** | (i) செஞ்சட்டை இராணுவம் | A | சேர்பியாவின் இரகசிய பயங்கரவாத அமைப்பு |
| | (ii) சிவப்பு இராணுவம் | B | முசோலினி |
| | (iii) கறுப்பு கை (Black hand) அமைப்பு | C | நாஸி இரகசிய பொலிஸ் |
| | (iv) கருஞ்சட்டை இராணுவம் | D | கரிபோல்ட்டி |
| | (v) கெஸ்ரபோ | E | ட்ரொஸ்கி |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (……)

● **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

**21.** கிரேக்க இலக்கியம்
(1) இலியட், ஒடிசி என்பன மிகப் பிரசித்திபெற்ற கிரேக்க வீரகாவியங்கள் ஆகும்.
(2) ஈனிட் இன்னுமொரு கிரேக்க வீர காவியம் ஆகும்.
(3) சபோ, பின்டோர் ஆகியோர் சிறந்த கிரேக்க பாடல் கவிஞர்கள் ஆவர்.
(4) கிரேக்கர்களின் அதிமேன்மையான இலக்கியப் படைப்பு துன்பியல் நாடகங்களாகும்.
(5) அரிஸ்டோபனீஸ் நகைச்சுவை நாடக எழுத்தாளர் ஆவார். (……)

**22.** சிலுவைப்போர்கள்
(1) மத்திய காலப்பகுதியின் இரண்டாம் அரைப் பகுதியில் சிலுவைப்போர்கள் இடம்பெற்றன.
(2) சிலுவைப்போர் என்பது கிறிஸ்தவர்கள் தமது புனித பூமியை முஸ்லிம்களிடமிருந்து மீண்டும் கைப்பற்றுவதற்காக முன்னெடுத்த தொடர்ச்சியான போர்கள் ஆகும்.
(3) சிலுவைப் போருக்கு பாப்பாண்டவர் ஆதரவு வழங்கவில்லை.
(4) சிலுவைப் போர்கள் நில மானிய முறை வீழ்ச்சியடையப் பங்களிப்புச் செய்தது.
(5) சிலுவைப் போர்கள் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை ஊக்குவித்தது. (……)

[பக். 4 ஐப் பார்க்க

**23.** தேசிய அரசுகள்
(1) தேசிய அரசுகள் முதலில் ஸ்பானியா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தோற்றம் பெற்றன.
(2) தேசிய அரசுகள் அந்நாடுகளில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தின.
(3) தேசிய அரசுகள் இறைமையுடைய அரசுகள்.
(4) தேசிய அரசுகள் அந்த நாடுகளில் உள்ளக உறுதித்தன்மையை ஏற்படுத்தின.
(5) தேசிய அரசுகளின் அதிகாரம் மானிய முறை பிரபுக்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. (……)

**24.** **1917** ரஷ்யப் புரட்சி
(1) மார்ச் மாத மென்ஷ்விக் புரட்சி, நவம்பர் (ஒக்ரோபர்) மாத பொல்ஷ்விக் புரட்சி என்றவாறு ரஷ்யப் புரட்சி இரண்டு படிநிலைகளில் இடம்பெற்றது
(2) ரஷ்யப் புரட்சியின்போது சார் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.
(3) 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்பன ரஷ்யப் புரட்சியின் முதன்மை வாசகங்களாகும்.
(4) ரஷ்யப் புரட்சி லெனின் தலைமைத்துவத்தின் கீழ் வெற்றி பெற்றது.
(5) ரஷ்யப் புரட்சியின் பின்னர் சோவியத் சமவுடைமை குடியரசு சங்கம் (USSR) உருவாக்கப்பட்டது. (……)

**25.** பனிப்போர்
(1) சோவியத் அணி நாடுகளுக்கும் மேலைத்தேய முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டம்
(2) 1949 இல் வட அத்லாந்திக் உடன்படிக்கை அமைப்பு உருவாக்கப்பட்டது.
(3) 1955 வார்சோ உடன்படிக்கை
(4) பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் ஒழுங்கமைப்பு (OPEC) தாபிக்கப்படுதல்
(5) 1989 இல் மோல்டாவில் இடம்பெற்ற இராஜ தந்திரிகளின் உச்சி மாநாட்டில் பனிப்போர் உத்தியோகபூர்வமாக முடிவடைந்ததாக பிரகடனப்படுத்தப்படல் (……)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **4** எனவும்
வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் .......... **5** எனவும்
அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** மறுமலர்ச்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) புராதன கிரேக்க உரோம நாகரிகங்கள் மீண்டும் எழுச்சி பெறுதல் 'மறுமலர்ச்சி' எனக் கருதப்படுகின்றது.
(B) மறுமலர்ச்சி வட இத்தாலிய நகர அரசுகளில் ஆரம்பமாகியது.
(C) மறுமலர்ச்சியினால் மத்தியகால கலை வடிவங்கள் மேன்மை நிலை அடைந்தன.
(D) மறுமலர்ச்சியின் முக்கிய நிலையமாக ஜெனிவா விளங்கியது. (……)

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**27.** பிரித்தானிய பாராளுமன்ற முறை தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) எட்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் பிரித்தானிய பாராளுமன்றம் ஆரம்பமானது.
(B) ஸ்ரூவர்ட் மன்னர்கள் பாராளுமன்றத்தை வலுப்படுத்தும் கொள்கையைப் பின்பற்றினர்.
(C) பிரதம மந்திரியும் அமைச்சரவையும் அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்கும் பொறுப்பைக் கொண்டிருந்தனர்.
(D) பிரித்தானிய பொதுநலவாய அமைப்பின் அங்கத்துவ நாடுகள் பலவற்றினால் பிரித்தானிய பாராளுமன்ற முறைமை பின்பற்றப்பட்டு வருகின்றது. (……)

**28.** கைத்தொழில் புரட்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) கிராமியப் பொருளாதாரத்திலிருந்து நகரப் பொருளாதாரத்துக்கு ஐரோப்பாவின் பொருளாதாரத்தை மாற்றியமைத்து உற்பத்திக் கைத்தொழில்களில் ஏற்பட்ட மாற்றமே 'கைத்தொழில் புரட்சி' எனக் கருதப்படுகின்றது.
(B) கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமானது.
(C) கைத்தொழில் புரட்சி ஐரோப்பாவுக்கு பரவியது.
(D) நீண்டகாலப் போக்கில் கைத்தொழில் புரட்சி புதிய ஏகாதிபத்தியவாதம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது. (……)

**29.** நெப்போலியன் பொனபாட் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) நெப்போலியன் பொனபாட் 1804 தொடக்கம் 1814 வரை பிரான்சின் சக்கரவர்த்தியாக இருந்தான்.
(B) நெப்போலியன் பொனபாட்டினால் மேற்கொள்ளப்பட்ட விரிவாக்கக் கொள்கைக்கு ஆஸ்திரியா உதவி அளித்தது
(C) நெப்போலியன் பொனபாட் 'புரட்சியின் குழந்தை' என்று அழைக்கப்பட்டான்.
(D) நெப்போலியன் பொனபாட்டின் வீழ்ச்சிக்குப் பின்னர் லூயி நெப்போலியன் பிரான்சின் சக்கரவர்த்தி ஆனான் (……)

**30.** இரண்டாம் உலகப்போரின் போதும் அதன் பின்னரும் சோவியத் யூனியன் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) இரண்டாம் உலகப்போரின் போது லியோனெட் பிரஸ்னெவ் சோவியத் யூனியனின் அரச தலைவனாக இருந்தான்.
(B) சோவியத் யூனியனின் ஒத்துழைப்புடன் ஐக்கிய அமெரிக்க அரசு ஜப்பான் மீது அணுகுண்டைப் போட்டது.
(C) போரின் பின்னரான காலப்பகுதியில் சோவியத் யூனியன் இரண்டு மேலாதிக்க நாடுகளில் ஒன்றாகத் தோற்றம் பெற்று வந்தது.
(D) 1985 மிக்கேல் கொர்பச்சேவ் சோவியத்தின் தலைவர் ஆனான். (……)

● **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** அதென்ஸில் பிளேட்டோவினால் தாபிக்கப்பட்ட பாடசாலை எது?
(1) ஒலிம்பஸ் (2) டெல்பி (3) அக்கடமி
(4) லைசியம் (5) சாகிரஸ் (……)

**32.** பைசாந்தியன் ஏகாதிபத்தியத்தின் தலைநகரம் எது?
(1) எதேன்ஸ் (2) அலொக்சாந்திரியா (3) உரோம்
(4) ஜெருசலம் (5) கொன்ஸ்தாந்திநோபிள் (……)

**33.** 'இறுதித் தீர்ப்பு' ஓவியத்தை வரைந்த புகழ்பெற்ற புளோரன்ஸ் கலைஞர் யார்?
(1) மஸசியோ (2) சாந்திரோ பொட்செலி
(3) லியனாடோ டா வின்சி (4) மைக்கல் ஏஞ்சலோ
(5) டொன்ரெலோ (……)

[பக். 6 ஐப் பார்க்க

**34.** பரிணாமவாதக் கோட்பாட்டை முன்வைத்தவர் யார்?
(1) ஆகஸ்ரே கொம்டி (2) சார்ள்ஸ் டார்வின்
(3) ஹர்பேட் ஸ்பென்சர் (4) பிரடெரிக் நீட்ஷே
(5) அல்பேர்ட் ஐன்ஸ்ரையின் (......)

**35.** இரண்டாம் உலகப்போரின்போது பிரித்தானியாவின் பிரதமந்திரி யார்?
(1) லொயிட் ஜோர்ஜ் (2) ஸ்ரான்லி போல்ட்வின்
(3) ரம்சே மக்டொனல்ட் (4) வின்ஸ்ரன் சேர்ச்சில்
(5) ஹரோல்ட் மக்மிலன் (......)

● **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் கிரேக்க நகர அரசுகள் மஸிடோனியாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. | மகா அலெக்சாந்தரின் கீழ் கிரேக்க கலாசாரம் அவனுடைய சாம்ராச்சியத்தின் பிரதேசங்கள் பலவற்றிலும் பரவியது. | (......) |
| **37.** | தொமஸ் ஹொப்ஸ் அவரது முக்கிய ஆக்கமான **லெவியதான்** மூலம் மக்களின் விருப்பத்துடன் கூடிய அரசு பற்றிய கருத்துகளை நியாயப்படுத்தினார். | மொன்டெஸ்கியூ, ரூசோவின் நூல்களின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தார். | (......) |
| **38.** | பிரான்சியப் புரட்சியானது நவீன பிரான்சை மட்டுமன்றி நவீன ஐரோப்பாவையும் வடிவமைப்பதில் தீர்மானம் மிக்க காலப்பகுதியாக அடையாளம் காணப்படுகின்றது. | "பழைய ஆட்சி" (ANCIEN REGIME) ஆட்சியில் நிலவிய உயர் வகுப்பின் சமூகத்தை இல்லாதொழித்து பிரான்சியப் புரட்சி நடுத்தர வகுப்பு எழுச்சிபெறுதலை உறுதிப்படுத்தி ஐரோப்பாவில் நவீன வளர்ச்சியை துரிதப்படுத்தியது. | (......) |
| **39.** | 'இத்தாலி வெறுமனே பூகோள கூற்று மட்டுமே' என்று மஸ்ஸனி கூறினார். | சர்ச்சிலின் 'இரும்புத்திரை' கூற்று சோவியத் அணி, மேற்குலக முதலாளித்துவ நாடுகள் என்பவற்றுக்கிடையில் நிலவிய பிளவினை மேலும் விரிவாக்கியது. | (......) |
| **40.** | 1956 இல் நிகிதா குருசேவ் மேற்குலகத்துடன் அமைதியான சகவாழ்வுக் கொள்கையைப் பிரகடனப்படுத்தினார். | ஜெர்மன் சனநாயக குடியரசு (கிழக்கு ஜெர்மனி) 1973 இல் வட அத்லாந்திக் உடன்படிக்கை அமைப்பின் உறுப்பு நாடு ஆகியது. | (......) |

* *

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

යුරෝපා ඉතිහාසය II (II කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி II)
History of Europe II (Part II)

25 B T II

ஐரோப்பிய வரலாறு - கிரேக்க - உரோம காலம் முதல் கி.பி. **1989** வரை

**அறிவுறுத்தல்கள் :**

- ※ நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
- ※ பகுதி **II** ஆனது **A, B, C** ஆகிய **மூன்று** பகுதிகளைக் கொண்டது.
- ※ பகுதி **A** இன் வினா கட்டாயமானது.
- ※ பகுதி **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, மேலும் **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **ஐரோப்பாவின் புறவுருவப்படம்** பகுதி **I** உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா **இடங்களையும்** குறித்துப் பெயரிடுக.

(i) கிரீட் (ii) உரோம் (iii) போ நதி
(iv) வெனிஸ் (v) போர்த்துக்கல் (vi) ஆங்கிலக் கால்வாய்
(vii) லிவர்பூல் (viii) அசோவ் கடல் (ix) பொஸ்பரஸ் நீரிணை
(x) விஸ்ரியூலா நதி (xi) பேர்ளின் (xii) பின்லாந்து

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** (i) கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியில் உரோமர்களிடையே நிலவிய சமய நம்பிக்கைகள் பற்றி விவரிக்குக. (06 புள்ளிகள்)

(ii) கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதிவரை உரோம சாம்ராச்சியத்தில் கிறிஸ்தவ சமயம் பரவிய முறையினைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

**3.** "புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம் சமயம்சார் காரணங்களால் மட்டுமன்றி அக்காலத்தில் நிலவிய அரசியல், பொருளாதார நிலைமைகளின் ஊடாகவும் உருவாகியது."

(i) புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம் ஆரம்பமான நாட்டின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தத்தின் தலைவர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) மேலே (3) (ii) இற்குரிய தலைவர்களில் **ஒருவரினால்** புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தத்திற்கு வழங்கப்பட்ட பணிகளை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம் ஏற்படுவதற்குக் காரணமான சமய, அரசியல், பொருளாதார காரணிகளைப் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

4. (i) அமெரிக்க சுதந்திரப்போர் ஏற்படுவதற்குக் காரணமான அரசியல் பொருளாதாரக் காரணிகளைப் பகுப்பாய்வு செய்க. (12 புள்ளிகள்)

(ii) அமெரிக்க சுதந்திரப்போரின் வெற்றிக்கான காரணங்களைப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

5. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) கிரேக்க தத்துவஞானம்

(ii) போர்த்துக்கேயர் மேற்கொண்ட நாடுகாண் பயணங்கள்

(iii) எதிர்மதச் சீர்திருத்தம்

(iv) மகோன்னத புரட்சி

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

6. ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் இயக்கத்தில் இடம்பெற்ற முக்கிய சந்தர்ப்பங்களில் விசேட கவனம் செலுத்தி அது தொடர்பில் பிஸ்மார்க்கினால் நிறைவேற்றப்பட்ட வகிபாகத்தை பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

7. "இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதற்கான அடிப்படை வித்தினை வேர்சேல் உடன்படிக்கை கொண்டிருந்தது."

(i) வேர்சேல் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட தோல்வியடைந்த நாட்டின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) வெற்றியடைந்த நேச நாடுகளின் தலைவர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) வேர்சேல் உடன்படிக்கையின் முக்கிய நிபந்தனைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) வேர்சேல் உடன்படிக்கையின் நீண்ட காலத் தாக்கத்தை மதிப்பிட்டு, இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதற்குக் காரணமான முக்கிய விடயங்களைப் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

8. (i) ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை? (06 புள்ளிகள்)

(ii) 1968 வரை அமைதி பேணும் நிறுவகமாக ஐக்கிய நாடுகள் சபை எவ்வளவுக்கு வெற்றியடைந்துள்ளது என்பதைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

9. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வியன்னா மாநாட்டின் முக்கிய அடைவுகள்

(ii) கமிலோ கவூர்

(iii) புதிய ஏகாதிபத்தியம் (imperialism)

(iv) இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

AL/2023(2024)/25 B/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

| | | | |
|---|---|---|---|
| යුරෝපා ඉතිහාසය<br>ஐரோப்பிய வரலாறு<br>History of Europe | II<br>II<br>II | 25 B | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. } **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. } ....................................




වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

LOL Book Store

# 25% OFF ALL BOOKS

Including Exercise Books,
CR Books, and B5 Books




ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්

ORDER BOOKS FROM LOL BOOKS STORE

0372060110 WWW.LOL.LK

071 777 4440 (WhatsApp)

Cash On Delivery Available


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP – 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!